CONNEMARA PUBLIC LIBRARY MADRAS 3-JAN 1956 667 4-54

மூன்றாம் ஆண்டு. Regd. No. M 6207

கிராமோதயம்

மலர் 2 திருப்பூர் – நவம்பர் 15 * 1954 * விலை 1 அணா இதழ் 25

தமிழகத்தில் ஸ்ரீமதி விமலா தக்கர் அவர்களின் பூமிதான யாத்திரை

தமிழ்நாடு பூமிதானக்கமிட்டி.

ஊழியர்களுக்கு விமலா தக்கர் அவர்கள் ஆலோசனை.

நான்குவித வேலைத்திட்டம்.

200 பேர்கள் 440 ஏக்கர் நிலதானம்.

ஸ்ரீமதி. விமலா தக்கர் எம். ஏ., அவர்களின் ஒருவார பூமிதான யாத்திரை, திருமங்கலம் தாலூகாவில் 27-ம் தேதி முடிவானது. திருமங்கலம் தாலூகா கரிசல் காட்டுப்பகுதியில் யாத்திரை நடந்தபடியால் மழை காலத்தில் சேறும் சகதியுமாக யாத்திரை நடத்துவது கஷ்டமாயிருப்பினும் எல்லோருடைய ஒத்துழைப்பாலும் யாத்திரை வெற்றிகரமாக நடைபெற்றது. ஸ்ரீமதி. விமலாதேவி அவர்கள் 65 மைல் நடந்து 28 கிராமங்களுக்கு விஜயம் செய்தார்கள். கிராம மக்கள் ஆண்களும் பெண்களும் ஆயிரக்கணக்கில் திரண்டு யாத்திராக் கோஷ்டியினரை வரவேற்று பூமிதான இயக்கச் செய்தியைக் கேட்டனர். திருமங்கலம், உசிலம் பட்டி, சேடபட்டி பிர்க்காவில் இயக்கதிற்கு சிறந்த சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. மழையின் காரணமாக எல்லா நிலச்சுவான்தார்களையும் அணுக முடியாவிட்டாலும் இந்த யாத்திரை முடிவில் 200 பேர்கள் 440 ஏக்கர் நிலதானமளித்தனர். கிராம மக்கள் எளிதில் வாங்கி சுலபமாக படிக்கக்கூடிய பூமிதான இயக்கத்தைப்பற்றிய பலவித பிரசுரங்கள் அரையணா, ஓரணா, இரண்டணா சொற்ப விலையில் நூற்றுக்கணக்கில் விற்பனையாகியிருக்கிறது.

ஊழியர்களுக்கு விமலாதேவி ஆலோசனை.

சில இடங்களில் பெரிய மிராசுதார்கள் குறைவாக நிலதானம் கொடுத்தபொழுது ஸ்ரீமதி. விமலா தக்கர் ஏற்றுக்கொள்ள மறுத்தார். பிரார்த்தனைக் கூட்டத்தில் ஸ்ரீமதி. விமலா அவர்கள் பெரிய நிலச்சுவான்தார்கள் தானம் கொடுக்க மறுத்தாலும் அல்லது குறைவாகக் கொடுத்தாலும் பூமிதான ஊழியர்கள் மனதில் சிறிதும் கோபதாபமோ, துவேஷமோ கொள்ளக்கூடாதென்றும் பொறுமையுடன் திரும்பத் திரும்ப அவர்களை அணுகி இயக்கத்தின் கருத்துக்களை தெளிவுபடுத்த வேண்டுமென்றும் ஒரு முறை கேட்டுவிடுவதால் முழுப் பலன் கிடைத்துவிடுமென்று எதிர்பார்க்கக்கூடாது என்றும் தெரிவித்தார். மேலும் அவர் பேசியதாவது:-

பிச்சையல்ல; உரிமை கேட்கிறோம்!

"பூமிதான இயக்கம்" பிச்சை கேட்பதல்ல. நாம் நிலச்சுவான்தார்களிடத்தில் ஏழைகளின் உரிமைக்காக வாதாடுகிறோம். நியாயத்தை எடுத்துச் சொல்கிறோம். அதிகமாக உடையவர்கள் குறைவாகக் கொடுத்தால் நாம் தைரியத்துடன் அதே சமயத்தில் பணிவுடன்நிராகரிக்கவேண்டும். குறைவாகக் கொடுப்பது வழங்குவோருக்கும் கண்ணியமில்லை. வாங்குவோர்களுக்கும் கௌரவமில்லை. ஏழைகள் திருப்தியடையமாட்டார்கள். அதிகமாக உடையவர்கள் ஒவ்வொருவரும் குறைந்தது ஆறில் ஒரு பங்கு, முதல் தடவையாகக் கொடுக்கவேண்டுமென்பது வினோபாஜியின் கோரிக்கை. இதை நாம் அன்பாக நிலச்சுவான்தார்களுக்கு விளக்க வேண்டும். குறைந்த தானத்தை நாம் வாங்கிக் கொள்ள வேண்டுமென்பது அவசியமில்லை. தகுந்த காலம் வரும்பொழுது அவர்கள் தாங்களாகவே தகுந்தவாறு கொடுப்பார்கள். அதற்குத் தகுந்த சூழ்நிலையை உண்டாக்குவது நமதுகடமை. அதற்கு ஊழியர்கள் நல்ல முறையில் திட்டம் வகுத்து வேலை செய்யவேண்டும்.

நான்கு வித வேலைத்திட்டங்கள்.

1. பூமிதான ஊழியர்கள் ஒவ்வொரு கிராமத்தில் பூமிதான செய்தி எட்டும்படி செய்யவேண்டும்.
2. பெரிய நிலச்சுவான்தார்களாயினும், சிறிய நிலச்சுவான்தார்களாயினும், கிராமத்திலுள்ள எல்லாப்பட்டாதாரர்களையும் அணுகி வினோபாஜியின் பூமிதான இயக்கக் கருத்துக்களை விளக்கி தானம் கேட்கவேண்டும்.
3. பூமிதான இயக்கப்பிரசுரங்களை நல்லமுறையில் கிராமங்களில் பரப்பவேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் பூமிதான இயக்கப்பத்திரிகைகளாகிய கிராமோதயம், சர்வோதயம் ஆகியவைகளுக்குச் சந்தாதார்களைச் சேர்க்கவேண்டும். எலிமெண்டரி, ஹையர் எலிமெண்டரி உயர்தர பாடசாலைகளுக்குச்சென்று வினோபாஜி அவர்களின் வாழ்க்கை வரலாறு, பூமிதான இயக்கக் கருத்துக்களை பள்ளிமாணவ மாணவிகளுக்குத் தெரிவிக்கவேண்டும். பள்ளி மாணவ மாணவிகள் பூமிதான இயக்கப்பாடல்களைப் பாடிக்கொண்டு வாரத்திற்கொருமுறை கிராம ஊர்வலம் நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும். இவ்விதம் ஒவ்வொரு கிராமத்திலும் தீவிரப்பிரசாரம் செய்யப்படவேண்டும்.
4. ஒவ்வொரு கிராமத்திலும் நிலமில்லாத ஏழைகளை ஒன்றுதிரட்டி அவர்களுக்கு இயக்கத்தின் தத்துவங்களை விளக்கி அவர்கள் தைரியமாக தலை நிமிர்ந்து தங்களுடைய கடமையையும், உரிமையையும் உணரும்படி செய்யவேண்டும்.

தமிழகத்திற்கு விநோபாஜி விஜயம் செய்வார்

ஸ்ரீமதி விமலாதேவி அவர்கள், பூஜ்ய விநோபாஜி அவர்கள் இன்னும் ஒரு வருஷத்திற்குள் தமிழ்நாட்டிற்கு வரக்கூடுமென்றும் ஆகையால் பூதான ஊழியர்கள் மேற்கண்டவாறு திட்டம் வகுத்து வேலை செய்தால் தமிழ்நாட்டில் இயக்கத்திற்குச் சிறந்த வெற்றி கிடைக்குமென்றும் இதற்காக ஊழியர்கள் இப்போதிருந்தே ஈடுபடவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

ஸ்ரீமதி விமலா தக்கர் அவர்கள் மதுரை ஜில்லா திருமங்கலம் தாலுகாவில் யாத்திரையை முடித்துக்கொண்டு 28ம் தேதி திருநெல்வேலி ஜில்லா புறப்படுகிறார்கள். 28ம் தேதி முதல் நவம்பர் மாதம் 10ம் தேதிவரை திருநெல்வேலி ஜில்லாவில் பூமிதான யாத்திரை செய்வார்கள்.

"பூமிதான இயக்கம் ஒவ்வொரு வீட்டிலும் விளக்கேற்றிவைக்கும்''

— *விமலா தக்கர்*

பேரையூர் ஜமீன்தார் இரண்டாவது தவணையாக 100 ஏக்கர் நிலதானம் அளித்தார்

பேரையூர் ஜமீன்தார் ஸ்ரீ தும்பிச்சி முத்துவீரப்ப நாயக்கர் அவர்கள் ஏற்கனவே ஸ்ரீ சங்கர்ராவ்தேவ் அவர்கள் யாத்திரையில் 270 ஏக்கர் நிலதானம் அளித்துள்ளார். ஸ்ரீமதி விமலாதேவி அவர்களின் இந்த யாத்திரையின்போது பூமிதான இயக்கத்தினரும், தாலுகா காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஸ்ரீ கே. ஆர். கே. திருப்பதி நாடார் அவர்களும் ஜமீன்தார் அவர்களை அணுகி நிலதானம் கொடுக்கும்படி கேட்டனர். ஜமீன்தார் அவர்கள் முதன் முதலாக 30 ஏக்கர் கொடுப்பதாகத் தெரிவித்தார்கள். ஆனால் ஸ்ரீ திருப்பதி நாடார் அவர்களும் மற்றும் பூமிதான கோஷ்டியாரும் இன்னும் அதிகமாகக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டவுடனேயே 100 ஏக்கர் நிலதானம் கொடுப்பதாக வாக்களித்தார். இந்த 100 ஏக்கரில் 50 ஏக்கர் நஞ்சை சாகுபடிக்கு லாயக்கானவை இதைத் தவிர தாம் கொடுக்கும் 50 ஏக்கர் புஞ்சை நிலத்தில் குஷ்டரோக நிலையம் ஏற்படுத்த வேண்டுமென்று பூமிதானக் கமிட்டியாரையும், பூஜ்ய விநோபாஜி அவர்களையும் கேட்டுக்கொண்டுள்ளார்.

சேடபட்டியில் இன்று நடைபெற்ற பெரிய பூதான பொதுக் கூட்டத்தில் ஸ்ரீமதி விமலா தக்கர் அவர்கள் பேசியதாவது:—

தீபாவளியன்று —பூமிதானம் கொடுத்து புனித நாளை கொண்டாடுங்கள்

"இன்று தீபாவளி இரவு. நாளை விடிந்தால் தீபாவளி நாள். ஒவ்வொரு வீட்டிலும் எண்ணெய் ஸ்நானம் செய்து புது ஆடைகள் உடுத்தி விளக்கேற்றி கடவுளைக் கும்பிட்டு பலகாரங்கள் அருந்தி சந்தோஷம் கொண்டாடும் நாள். ஆனால் எல்லா வீடுகளிலும் தீபாவளி சந்தோஷமாகக் கொண்டாடப்படுவதில்லை. எத்தனையோ வீடுகளில் தலைக்கும் எண்ணெய் இருப்பதில்லை, விளக்கேற்றி வைக்கவும் எண்ணெய் இருப்பதில்லை. தீபாவளி ஆனாலும் ஆயிரமாயிரம் குடும்பங்களுக்குப் பழைய கந்தைத் துணியும் கிடைக்க வழி கிடையாது. சுதந்திர இந்தியாவில் தீபாவளி தினத்தன்றாவது எல்லோருக்கும் உணவும், உடையும் கிடைக்க வேண்டாமா? விநோபாஜி அவர்கள் சுதந்திர இந்தியாவில் இந்த ஏற்றத் தாழ்வைப் போக்கவே அரும்பாடுபட்டு வருகிறார். பூமிதான இயக்கம் நிலச்சுவான்தார்கள் ஏழைகளைப் பற்றி சிந்திக்கவும், அவர்களுக்காக தங்கள் சொத்தில் நிலம், பணம் ஆகியவற்றில் ஒரு பகுதியைக் கொடுக்கும் படியும் கேட்கிறது. ஆயிரக்கணக்கான பெரிய சிறிய நிலச்சுவான்தார்கள் மனம் மாறி விநோபாஜி அவர்களிடம் பல லட்சக்கணக்கான நிலங்களை அர்ப்பணித்துவிட்டனர். குடிகாரர்களும், துர் நடத்தை, கொடியவர் என்று பெயர் பெற்ற பல நிலச்சுவான்தார்கள்கூட பூமிதான இயக்கத்தில் மனம் மாறி நிலதானம் அளித்திருக்கிறார்கள். பலாத்காரமோ, சட்டம் என்ற நிர்ப்பந்தமோ இல்லாமல் இவ்வியக்கம் நிச்சயம் வெற்றியடையும் என்பதில் சந்தேகமில்லை என்றும் தெரிவித்தார்.''

ஸ்ரீ டி. பி. சிவம் பூமிதான இயக்கப் பாடல், பூஜ்ய விநோபாஜி அவர்களின் வாழ்க்கை வரலாறு பற்றி கதாகாலக்ஷேபம் நடத்தினர்.

இன்று கீழ்க்கண்ட பிரகாரம் 128 ஏக்கர் தானம் அறிவிக்கப்பட்டது.

		ஏக்கர்	செ.
பேரையூர் ஜமீன்தார் ஸ்ரீ தும்பிச்சி முத்துவீரப்ப நாயக்கர்	...	100	00
சேடபட்டி			
ஸ்ரீ க. வெள்ளைச்சாமித் தேவர்	...	3	00
,, அ. சூர்யநாராயணத் தேவர்	...	1	40
,, சு. சங்கரப்ப நாயக்கர்	...	1	25
,, கந்தவேல் தேவர்	...	2	00
பெருமாள்பட்டி			
,, அ. மாயமிருந்தேவர்	...	20	00
உத்தப்பநாயக்கனூர்			
,, செல்லமுத்து குமாரப் பிள்ளை	...	1	18
மொத்தம்	...	128	83

திருமங்கலம் தாலுகாவில் 164 ஏக்கர் நில தானம்

மழையிலும் யாத்திரை நிற்காமல் நடைபெறுகிறது

ஸ்ரீமதி விமலா தக்கர் எம். ஏ., அவர்கள் செங்கற்பட்டு ஜில்லா பொன்னேரி தாலுக்காவில் யாத்திரையை முடித்துக்கொண்டு மதுரை ஜில்லா திருமங்கலம் தாலுக்காவில் அக்டோபர் 21-ம் தேதியிலிருந்து ஆரம்பித்திருக்கிறார்கள். 20-ம் தேதி இரவு திருமங்கலம் டவுனில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீ என். எஸ். வீரபத்திரத் தேவர், டவுன் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். ஸ்ரீ ச. ஜெகந்நாதன், தமிழ்நாடு பூமிதான கமிட்டிக் கன்வீனர் ஸ்ரீமதி விமலா தக்கர் அவர்களை அறிமுகப்படுத்தும்பொழுது ஸ்ரீமதி விமலா தக்கர் அவர்கள் நாக்பூர் யுனிவர்ஸிடியில் எம். ஏ., பட்டம் பெற்றபின் யுவர் மகாநாட்டிற்காக மேல் நாடுகளுக்குச் சென்று திரும்பிய பின் ஐரோப்பிய நாடுகளிலும் சுற்றி அனுபவம் பெற்றவர். மேல் நாடுகளுக்கு சென்று திரும்பிய பிறகு கடந்த இரண்டு வருடங்களாக பூமிதான இயக்கத்தில் சேர்ந்து பூஜ்ய விநோபாஜி அவர்களின் சிஷ்யையாக அபாரமான சாதனைகளைச் சாதித்து பல பெரிய நிலச்சுவான்தார்களின் மனதை மாற்றி அதிகமான நிலதானம் பெற்றிருப்பதாகவும் தெரிவித்தார். 1954-ம் வருஷ இறுதிக்குள் தமிழ்நாட்டில் சேர்க்க வேண்டிய நிலதானம் கோட்டா ஒன்றரை லட்சம். அதில் ஒரு ஜில்லாவிற்கு 15,000 ஏக்கர் சேர்க்க வேண்டும். மதுரை ஜில்லாவில் இதுவரை 5,000 ஏக்கர்தான் சேர்ந்திருப்பதாகவும் பாக்கி 10,000 ஏக்கரை சேர்ப்பதில் எல்லோரும் ஈடுபட்டு

3 - JAN 1956
MADRAS

இப்புனித இயக்கத்தைப் பூர்த்தி செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொண்டார். திருமங்கலம் தாலுகாவின் கோட்டாவில் 2,000 ஏக்கர் சேர்ந்திருப்பதாகவும் பாக்கி 1,000 ஏக்கரை சேர்த்து விட வேண்டுமென்ற நோக்கோடுதான் ஸ்ரீமதி விமலா தக்கர் அவர்களின் யாத்திரையை நடத்தி வருகிறோம். விமலா தக்கர் அவர்களின் யாத்திரை முடிவதற்குள் இந்தத் தாலுக்காவிற்குரிய இன்னும் 1,000 ஏக்கரைச் சேர்த்துவிடும்படியும் கேட்டுக் கொண்டார்.

எதற்கெடுத்தாலும் சர்க்காரும் சட்டமும் வேண்டுமா?

ஸ்ரீமதி விமலா தக்கர் அவர்கள்: "பூமிதான இயக்கம் கக்ஷி சார்பற்ற இயக்கம். சுதந்திரம் பெற்று 7 வருஷங்களாகியும் கிராமங்களில் மாறுதல் ஒன்றையும் காணோம். அரசியல் வாதிகள் தேர்தல்களில் போட்டியிடுவதோடு திருப்தி யடைந்துவிடுகிறார்கள். பிரச்னையைத் தீர்ப்பதில் மனதைச் செலுத்தாமல் இருக்கிறார்கள். பொது ஜனங்கள் சர்க்காரே எல்லாக் காரியங்களையும் செய்துவிடும் என்று எதிர்பார்க்கிறார்கள். சிறிய காரியங்கள் முதல் பெரிய காரியங்கள் வரை சர்க்கார் செய்யுமென்றும், எதற்கெடுத்தாலும் சட்டம் வர வேண்டுமென்றும் மக்களும், மக்களின் பிரதிநிதிகளும் மனோபாவம் கொண்டிருந்தால் தேசீயத்திற்கு பெரிய குறைபாடாகும்.

தனிநபர் சொத்துரிமையும் ஜனநாயகமும்.

ஜனநாயக சர்க்கார் நிலைக்கவேண்டுமென்றால் பொதுஜன விழிப்பு இருக்கவேண்டும். வினோபாஜி அவர்கள் பூமிதான இயக்கத்தின் மூலம் அவ் விழிப்பை ஏற்படுத்தி வருகிறார். நிலப்பிரச்னை சம்பந்தமாக சர்க்காரும், பொதுமக்களும் தீவிரமாக சிந்திக்க ஆரம்பித்துவிட்டனர்.

இந்தியாவில் பல ஆண்டுகளுக்குப் பிறகு ஜன நாயக சர்க்கார் ஏற்பட்டிருக்கிறது. தனி நபர் சொத்துரிமை இருக்கும் வரையில் ஏழை பணக்காரர் என்ற வித்தியாசம் இருந்துகொண்டேயிருக்கும். சொத்துரிமை இருக்கும் வரை ஜனநாயகம் பெயரளவில்தான் இருக்கும் உண்மையான ஜன நாயகமாக இருக்காது. தனி நபர் உடைமையும், சொத்து சேர்க்கும் மனப்பான்மையும் விட்டுவிட வேண்டுமென்று பூமிதான இயக்கம் கூறுகிறது. தானமென்பது பிச்சை கேட்பதல்ல. சரியான முறையில் சம பங்கிடுசெய்வதாகும். சமூகத்தில் தற்போதிருக்கும் சொத்தின் மதிப்பு மாற வேண்டு மென்று விரும்புகிறோம். தற்சமயம் சமுதாயத்தில் தனியுடைமை நபருக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. சர்க்காரால் நஷ்ட ஈடு கொடுப்பதென்பது முடியாத க்காரியம். ஆகையால் மக்கள் எல்லோரும் தனியுடைமைக்கு இடங்கொடுக்காமல் சமுதாய உடைமைக்கு மதிப்பும், கௌரவமும் கொடுக்கக் கூடிய சூழ்நிலையை பூமிதான இயக்கம் தோற்றுவித்து வருகிறது. பூமிதான இயக்கம் எந்த வாதத்தையும் சேர்ந்தது அல்ல, எந்த அரசியல் கட்சியையும் சேர்ந்ததல்ல. இது மக்களின் உடனடிப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு தோன்றியிருக்கும் இயக்கம்.

ஸ்ரீமதி விமலா தக்கர் அவர்களின் யாத்திரையில் கீழ்க்காணும் கிராமங்களில் கீழ்க்கண்ட விவரப்படி நிலதானம் கிடைத்திருக்கிறது.

		ஏ.	செ.
கல்லுப்பட்டி பிர்க்காவில் வசூலானநிலம் திருமங்கலம் பொதுக் கூட்டத்தில் அறிவித்தது.	...	81	00
திரளி	...	2	[illegible]½
அச்சம்பட்டி	...	11	60
கிழவனேரி	...	0	60
ச. மீனாக்ஷிபுரம்	...	2	60
பெ. பொக்கம்பட்டி	...	[illegible]	88
து. புதுப்பட்டி	...	0	25
தங்கலாச்சேரி	...	1	1[illegible]
துர்மக்குண்டு	...	0	3[illegible]
நாட்டாபட்டி	...	0	3[illegible]
ராமனுதபுரம்	...	0	[illegible]0
வடுகபட்டி	...	0	30
உசிலம்பட்டி, வாலாந்தூர் பிர்க்காவில் வசூலான நிலதானம் உசிலம்பட்டி பொதுக்கூட்டத்தில் அறிவித்தது.	...	5[illegible]	37
		162	86½
கட்டாங்குடி (உசிலம்பட்டி)	...	1	60
மொத்த நிலதானம்		164	46½

ஸ்ரீமதி விமலா தக்கர் எம். ஏ., திருச்செந்தூர் யாத்திரை

262 ஏக்கர் 51 செண்ட் நிலம் கிடைத்தது

சிக்கலான நிலப் பிரச்னைக்கு சிறந்த வழி பூமிதான இயக்கம்

நாசரத் வரவேற்பு

ஸ்ரீமதி விமலா தக்கர் அவர்களும், ஸ்ரீமதி கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன், ஸ்ரீமதி கமலா ஸ்ரீனிவாசன், தமிழ்நாடு பூமிதானக் கமிட்டிக் கன்வீனர் ஸ்ரீ ச. ஜெகந்நாதன், ஜி. சுப்பிரமணியம் இன்னும் பூமிதான ஊழியர்களும் திருமங்கலம் தாலுகா பூமிதான யாத்திரையை முடித்துவிட்டு திருச்செந்தூர் போகும் வழியில் நாசரேத் கிராமத்தார்கள் புகை வண்டி நிலையத்தில் தலைவர்களுக்கு கதர் மாலை சூட்டி பூமிதான கோஷங்களிட்டு மகிழ்ச்சியோடு வரவேற்றார்கள்.

திருச்செந்தூர் யாத்திரை

திருச்செந்தூர் புகை வண்டி நிலையத்தில் தலைவர்களை வரவேற்பதற்காக ஸ்ரீ கே. டி. கோசல் ராம், ஸ்ரீ எம். எம். சுப்பிரமணியம், ஸ்ரீ மங்களா பொன்னம்பலம், ஸ்ரீ ஆர். டி. பி. சுப்பிரமணிய நாடார், திருநெல்வேலி விபாக் அகில பாரத சர்வ சேவா சங்க சஞ்சாலக் ஸ்ரீ எஸ். ஆர். பழனியப்பன், ஸ்ரீ ஆறுமுக பாண்டியன், ஸ்ரீ செல்வராஜ், சங்கர் சதாசிவம் பிள்ளை, ஸ்ரீ ஜி. நாராயணன், ஸ்ரீ எம். மகாதேவன், ஸ்ரீ ஆர். ஜெயமணி, இன்னும் பூமிதான ஊழியர்களும் பொது ஜனங்களும் திரளாகக் கூடி தலைவர்களுக்கு கதர் மாலையிட்டு உற்சாகத்துடன் வரவேற்றனர். பின்னர் திருச்செந்தூர் உயர்நிலைப் பள்ளியில் நூற்பு யக்ஞம் நடைபெற்றது. அதன் பிறகு மாணவர்கள் கூட்டம் நடைபெற்றது. இரவு 7 மணிக்கு தேரடி மைதானத்தில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் ஸ்ரீமதி விமலா தக்கர் அவர்களை ஸ்ரீ ஜெகந்நாதன் அவர்கள் அறிமுகப்படுத்திவைக்கும் பொழுது விமலா தக்கர் வினோபாஜியின் முக்கிய சிஷ்யர்களில் ஒருவரென்றும், தமிழ்நாட்டில் செங்கற்பட்டு ஜில்லா பொன்னேரித் தாலுகா, மதுரை ஜில்லா திருமங்கலம் தாலுகாவில் யாத்திரையை முடித்துவிட்டு திருநெல்வேலி ஜில்லாவில் முதன் முதலாக புண்ணிய ஸ்தலமாகிய திருச்செந்தூரில் ஆரம்பித்து பன்னிரண்டு

(தொடர்ச்சி 142-ம் பக்கம் பார்க்க)

கிராமோதயம்

நவம்பர் 15 **** 1954.

மூன்றும் ஆண்டு.

"கிராமோதயம்" பத்திரிகைக்கு இந்த இதழிலிருந்து மூன்றும் ஆண்டு ஆரம்பமாகிறது. தவழ்ந்து, தளர் நடைபோட்டு, நன்கு நடக்கும் பருவத்தை எட்டியிருக்கிறது.

கிராம வாழ்வு சீர்பெறவேண்டும் என்ற குறிக்கோளை வாழ்க்கையில் கொண்டிருந்த அன்பர்கள் "கிராமோதயம்" வெளிவர ஆரம்பித்ததிலிருந்து இதன் மழலைகளை மகிழ்வுடன் கேட்டு வந்தனர். ஆரம்பத்தில் சுமார் 1000வாசகர்களின் ஆதரவுடன் தோன்றிய "கிராமோதயம்" இன்று சுமார் 8000 வாசகர்களின் அன்பையும் ஆதரவையும் பெற்று வளர்ந்தோங்கியுள்ளது. ஆகவே மூன்றும் ஆண்டு தொடக்கத்திலிருந்து வார இதழாக இதை வெளியிட பெரிதும் முயன்றோம். சட்டப்படி செய்யவேண்டிய பதிவு நடைபெறுவதில் ஏற்பட்ட தாமதத்தால் இடைக்கால ஏற்பாடாக இரண்டாம் ஆண்டின் விசேஷ இதழாக இதை வெளியிடுகிறோம். அடுத்த இதழை வார வெளியீடாக டிசம்பர் முதல் வாரத்தில் வாசகர்களுக்கு தர இயலுமென பெரிதும் நம்புகிறோம்.

நாட்டின் பொருளாதாரத்தில் அடிப்படையான கிராமக்கைத்தொழில்களும், கதரும் அவ்வளவாக சிரத்தையுடன் ஆதரிக்கப்படாதிருந்த நிலையிலே "கிராமோதயம்" ஆரம்பிக்கப்பட்டது. இத்தொழில்களுக்கு பாதுகாப்பும் சட்டபூர்வமான உத்திரவாதமும் கிட்டவேண்டுமென்று இடைவிடாது நாம் கூறிவந்துள்ளோம். அகில இந்திய கதர் கிராமக் கைத்தொழில் போர்டு அமைக்கப்பட்டது இவ்வகையில் நமது வெற்றியென்றே கூறலாம்.

கதர், கிராமக் கைத்தொழில்களின் பாதுகாப்பே நமது லட்சியமாக ஆரம்ப காலத்தில் கொண்டிருந்தோம். இன்று அதே லட்சியத்தில் இன்னும் சற்று முன்னே சென்று அத்தொழில்கள்நமது நாட்டில் சுரண்டலற்ற அஹிம்ஸா சமுதாயத்தை தோற்றுவிப்பதற்கு வழியாக வேண்டுமென்று கூறுகிறோம். அமைதியாக நடைபெறும் அஹிம்ஸை புரட்சியான பூமிதான இயக்கத்துடன் இத்துறையில் இணைந்து வேலை செய்துவருகிறோம்.

கிராமங்களின் மேம்பாட்டை பெரிதும் போற்றும் அன்பர்கள் யாவரும் இனியும் தொடர்ந்து "கிராமோதயத்தை" ஆதரிப்பார்களென்று நம்புகிறோம். "கிராமோதயம்" தமிழ்நாட்டிலுள்ள எல்லா கிராமங்களிலும், எல்லா வீடுகளிலும் பரவ வேண்டும். எதிர்கால சமுதாயம் பற்றிய நமது கொள்கைகளை மக்கள் அறிந்து கருத்திலே புரட்சி கொள்ளவேண்டும். இதனை எய்துவதற்கு அன்பர்கள் ஆவனசெய்து ஆதரிக்கவேண்டுகிறோம்.

தமிழ்நாட்டில் ஸ்ரீமதி விமலா டக்கர்

பூஜ்ய விநோபாஜீயின் சிஷ்யையும் பூமிதான யக்ஞ ஊழியர்களில் தலைசிறந்த ஒருவருமான ஸ்ரீமதி விமலா டக்கர் அவர்கள் அக்டோபர் 10ந் தேதி முதல் நவம்பர் 12ந்தேதி வரை தமிழ்நாட்டின் வடகோடியான செங்கல்பட்டு ஜில்லாவில் பொன்னேரி தாலுகாவிலிருந்து ஆரம்பித்து மதுரை ஜில்லாவில் திருமங்கலம் தாலுகாவிலும், திருநெல்வேலி ஜில்லாவில் ஸ்ரீவைகுண்டம் தாலுகாவிலும் பூமிதான யாத்திரை செய்தார்கள். இந்த யாத்திரையில் மொத்தம் 2100 ஏக்கர் நிலம் தானமாக கிடைத்திருக்கிறது. இந்த யாத்திரையின் போது பல இடங்களிலும் ஸ்ரீமதி விமலா டக்கர் அவர்கள் பேசிய விபரங்கள் இந்த இதழில் வெளிவந்துள்ளன.

கிராமோதய கதர் சங்கங்கள்

கிராமோதய கதர் சங்கங்களிலும் சென்ற ஆண்டு நடைபெற்ற வேலைகளைக் காட்டிலும் இந்த ஆண்டு அதிகமாக வேலைகள் நடைபெறுகின்றன. இனிவரும் ஆண்டிலும் மேலும் நல்ல சேவையை இந்த சங்கங்கள் செய்ய இப்போதிருந்தே முயலவேண்டும். கிராமங்களின் பொருளாதாரம் உயருவதற்கு கதரும், கிராமக் கைத் தொழில்களும் வளரவேண்டும். இத்துறையில் சகல அம்சங்களையும் நிறைவேற்ற கிராமோதய கதர் சங்கங்கள் திட்டமிட்டு வேலை செய்யவேண்டும். கிராமங்களுக்கு ஒரு சேவா கேந்திரமாக இவை விளங்கவேண்டும்.

— அ. பாலகிருஷ்ண பிள்ளை

தீபாவளி கதர் விற்பனை.

தீபாவளி கதர் விற்பனை அறிக்கை வேறிடத்தில் பிரசுரித்துள்ளதை நேயர்கள் காண்க. தமிழ்நாட்டின் எல்லா பகுதிகளிலும் சென்ற ஆண்டைக் காட்டிலும் இவ்வாண்டு அதிக விற்பனை ஆகியுள்ளதை காணலாம். மொத்தம் தமிழ்நாட்டில் சென்ற ஆண்டு அக்டோபர் 1ந்தேதி முதல் நவம்பர் 5ந்தேதி வரை 36 நாட்களில் சுமார் ரூ. 6.9 லட்சம் பெருமானமுள்ள கதர் விற்பனையாயிற்று. இவ்வாண்டு அக்டோபர் 1ந்தேதி முதல் அக்டோபர் 26ந்தேதி முடிய 26 நாட்களிலேயே சுமார் ரூ 8.6 லட்சம் பெருமானமுள்ள கதர் விற்பனையாகியுள்ளது.

சென்னை, மதுரை, திருச்சி, கும்பகோணம், திருவாரூர், கோயமுத்தூர், சிதம்பரம், நெல்லை முதலிய கிளைகளில் இவ்வாண்டு நடைபெற்ற விற்பனை நம்பிக்கையூட்டுவதாக இருக்கிறது.

திருப்பூர் பகுதியிலிருந்து அக்டோபர் மாதம் மட்டும் சுமார் ரூ. 3·8 லட்சம் பெருமானமுள்ள கதர் தயாராகி விற்பனைக் கிளைகளுக்கு அனுப்பப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

— லக்ஷ்மிநாராயணன்

அகில பாரத சர்வ சேவா சங்கம் (தமிழ்நாடு)

காதி வஸ்திராலயங்களில் தீபாவளி கதர் விற்பனை

(1—10—'54 to 26—10—'54)

திருப்பூர் பகுதி

	கிளைகள்	கதர் சில்லரை விற்பனை 1953	1954
		ரூ.	ரூ.
1.	கோயமுத்தூர்	23,042	26,330
2.	மூலனூர்	10,264	18,851
3.	சிதம்பரம்	14,125	17,774
4.	காங்கயம்	25,489	16,112
5.	படியூர்	8,615	12,982
6.	திருப்பூர் சில்லரை விற்பனை	7165	12 225
7.	தைலாம்பாளையம்	7,550	12,210
8.	திருப்பாபுலியூர்	9,472	11,725
9.	தாராபுரம்	5,320	11,452
10.	குண்டடம்	12,478	10,458
11.	ஈரோடு	5,840	10,031
12.	கோபிசெட்டிபாளையம்	9,505	10,030
13.	ஊத்துக்குளி	8,485	9,068
14.	வீரபாண்டி	7,039	9,806
15.	புளியம்பட்டி	6,529	9,400
16.	காந்திநகர்	6,920	7,740
17.	கொடுமுடி	5 178	6,603
18.	கொடுவாய்	4,910	6,509
19.	பல்லடம்	6,347	5,261
20.	குன்னத்தூர்	6,146	5,157
21.	திருக்கோவிலூர்	4,001	5,129
22.	வேலூர்	4,091	5,143
23.	P. பச்சாபாளையம்	—	4,977
24.	திருவண்ணாமலை	2,434	4,598
25.	சிவகிரி	40,70	4,656
26.	கேத்தனூர்	3,279	4,524
27.	உதகமண்டலம்	3,027	3,196
28.	ஆத்தூர்	1,863	2,377
29.	திண்டிவனம்	4,090	3,863
30.	ஊதியூர்	2,346	2,578
31.	அரிக்காரன்வலசு	3,058	3,048
32.	நம்பியூர்	3,189	3,573
33.	ராசிபாளையம்	—	3,061
34.	கிட்டாம்பாளையம்	—	49
35.	சென்னிமலை	6,006	3,556
	மொத்தம் ...	2,31,873	2,83,952

தஞ்சை பகுதி

	கிளைகள்	கதர் சில்லரை விற்பனை 1953	1954
		ரூ.	ரூ.
1	திருச்சிராப்பள்ளி	36,441	38,696
2	கும்பகோணம்	28,887	30,830
3	திருவாரூர்	14,586	16,270
4	மாயவரம்	12,037	14,104
5	தஞ்சாவூர்	12,717	12,157
6	மன்னார்குடி	12,043	11,666
7	கரூர்	4,628	10,627
8	காட்டுமன்னார்	11,591	8,637
9	நாகபட்டினம்	7 348	8,532
10	பட்டுக்கோட்டை	7,026	6,811
11	திருவையாறு	1,946	3,510
12	தேனூர்	1,244	1,430
	C/o.	1,50,494	1,63,270
	B. F.	1,50,494	1,63,270
13	பூவத்தக்குடி	1,900	1,282
14	செந்துரை	532	448
15	அதிராம்பட்டினம்	884	936
16	திருமாந்துரை	529	—
	மொத்தம்...	1,54,339	1,65,936

மதுரை பகுதி

	கிளைகள்	கதர் சில்லரை விற்பனை 1953	1954
		ரூ.	ரூ.
1.	மதுரை விற்பனை கிளை	60,373	54,963
2.	ராஜபாளையம்	10,522	22,281
3.	ஸ்ரீவில்லிபுத்தூர்	8,618	11,265
4.	காரைக்குடி	10,389	10,579
5.	வ. புதுப்பட்டி	7,105	8,789
6.	திண்டுக்கல்	6,437	7,784
7.	திருமங்கலம்	3,253	6,607
8.	விருதுநகர்	5,064	6,066
9.	சுந்தரபாண்டியம்	4,703	6,825
10.	பேரையூர்	3,912	6,337
11.	அருப்புக்கோட்டை	4,093	5,010
12.	பரமக்குடி	6,317	7,050
13.	தி. புதுப்பட்டி	2,077	4,532
14.	பெரியகுளம்	3,803	4,253
15.	கம்பம்	3,445	4,025
16.	சிவகாசி	3,102	4,541
17.	முகவூர்	1,768	3,953
18.	பழனி	5,203	3,863
19.	மம்சாபுரம்	1,426	3,287
20.	எஸ். ஆலங்குளம்	479	2,000
21.	மதுரை உற்பத்தி	1,146	1 266
22.	சாத்தூர்	2,370	3,765
23.	வடக்கம்பட்டி	1,600	......
	மொத்தம்	1,57,205	1,89,041

சென்னைபகுதி

	கிளைகள்	1953	1954
		ரூ.	ரூ.
1	சென்னை	52,440 }	64,249
2	காஞ்சிபுரம்		3,577
	மொத்தம்...	52,440	67,826

திருநெல்வேலி பகுதி

	கிளைகள்	1953	1954
		ரூ.	ரூ.
1	திருநெல்வேலி	20,789	19,605
2	தூத்துக்குடி	8,132	9,237
3	சங்கரன்கோவில்	5,486	7,905
4	கோவில்பட்டி	6,613	7,474
5	கரிவலம்வந்தநல்லூர்	4,565	7,226
6	ஏரல்	3,517	6,795
7	சிப்பிப்பாரை	7,628	5,539
8	திசையன் விளை	6,500	5,861
9	புளியங்குடி	4,669	5,492
	C/o.	67,899	75,134

	B. F.	67,899	75,134
10	தென்காசி	4,347	5,003
11	கழுகுமலை	3,171	4,537
12	விஸ்வநாதபேரி	—	3,753
13	திருச்செந்தூர்	4,467	3,671
14	தி புதுப்பட்டி	3,155	3,411
15	கடம்பூர்	2,429	3,138
16	ஏழாயிரம்பண்ணை	1,253	2,368
17	விளாத்திகுளம்	5,501	2,880
18	வள்ளியூர்	1,023	2,136
19	காலாங்கரைப்பட்டி	2,277	1,496
20	வீரவநல்லூர்	1,074	1,410
21	கீழப்பாவூர்	1,700.	3,944
	மொத்தம் ...	98,296	1,12,881

விபாக் வாரியாக

		1953	1954
		ரூ.	ரூ.
1	திருப்பூர் பகுதி	2,31,873	2,83,952
2	மதுரை & இராமநாதபுரம் பகுதி	1,57,205	1,89,041
3	தஞ்சாவூர்	1,54,339	1,65,936
4	திருநெல்வேலி	98,296	1,12,881
5	சென்னை	52,440	67,826
	மொத்தம் ...	6,94,153	8,19,636
	அத்தாட்சி பெற்ற ஏஜண்டு மூலம் ரூ. ...		44,374
	ஆக மொத்தம் ரூ. ...	6,94,153	8,64,010

(139-ம் பக்கத் தொடர்ச்சி)

தினங்கள் யாத்திரை நடத்துவார்களென்றும் கூறினார்கள். கூட்டத்திற்கு ஸ்ரீ. கே. டி. கோசல்ராம் ஜில்லா காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தலைமை வகித்தார்.

திருமதி. கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன் பி. ஏ., பி. டி., அவர்கள் பேசும்போது புனிதன் வினோபாஜியால் ஆரம்பிக்கப்பட்டுவரும் இப்புனித இயக்கத்தை நாட்டில் பரப்பி மக்களிடையே புதிய சமுதாயக்கருத்தை உண்டுபண்ணுவதுடன் பொருளாதார சுதந்திரத்தையும், சமத்துவத்தையும் உருவாக்கும்படி கேட்டுக்கொண்டார்.

குழப்பத்திற்கிடையில் தெளிவு

சிக்கலான நிலப் பிரச்னைக்கு சிறந்த வழி பூமிதான இயக்கம்

ஸ்ரீமதி விமலா தக்கர் அவர்கள்பேசியதாவது:- "நமது நாட்டிலே மகான் வினோபாஜி அவர்கள் ஆரம்பித்திருக்கும் உன்னதமான இயக்கத்தின் கருத்தை எடுத்துச் சொல்லவே இங்கு வந்திருக்கிறேன். பூமிதான இயக்கத்தின் அடிப்படைக் கொள்கை சுதந்திரத்தை அடைவதற்குச் செய்த வேலையைக் காட்டிலும் மிக முக்கியமானது எந்த நாட்டிலும் ஒரு இயக்கம் நடைபெறுமானல் அது கட்சியின் அடிப்படையிலே நடைபெற்றிருக்கிறது. வினோபாஜி ஆரம்பித்திருக்கும் இயக்கம் எந்தக் கட்சியையும் சார்ந்ததில்லை. காந்திஜி இறந்த பிறகு அவருடனே கூட வாழ்ந்துவந்த பல அரசியல் தலைவர்கள் அரசியல் அதிகாரத்தைக் குறிக்கோளாகக் கொண்டவர்களாக நிர்மாண வேலைகளில் அக்கறையின்றி அதிலீடுபட்டிருப்பவர்களைக் குறைகூற ஆரம்பித்துவிட்டார்கள். இம்மாதிரியே நிர்மாண ஊழியர்களும் தாங்கள் தான் மகாத்மாவின் துணை சிறந்தவர்கள் என்ற மனப்பான்மையுடன் தங்களை ஒரு தனி ஜாதியாக பழையகாலத்து மடங்களைப்போல் ஆசிரமங்களை நிர்வகித்துக்கொண்டு மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளினின்று பிரிந்தவர்களாகி விட்டார்கள். ஆளும் அரசியல் கட்சி தங்கள் ஆட்சியை ஸ்திரப்படுத்துவதிலும் இதர அரசியல் கட்சிகள் அதிகாரத்தைப் பிடிப்பதில் போட்டாபோட்டி யிடுவதிலும் ஈடுபட்டிருக்கின்றனர். மக்கள்பால் நலங்கருதி மக்களிடையே சென்று சேவை செய்ய அரசியல் கட்சியினருக்கு அவகாசமிருப்பதில்லை. தவிர எங்கு பார்த்தாலும் மாகாணப் பற்று, மொழிப் பற்று, ஜாதியபிமானமும் அதிகரித்துவிட்டன. இந்தியா ஓர் தேசிய நாடு என்ற லட்சியம் குன்றிப் போய்விட்டது. இந்தக் குழப்பமான இருள் சூழ்ந்த சமயத்தில்தான் நம் நாட்டின் ஒளியாக வினோபா என்ற 60 வயதுக் கிழவர் மக்களிடையில் கருத்துப் புரட்சியை உண்டுபண்ணியிருக்கிறார். பொருளாதார சுதந்திரம் ஏற்பட அஹிம்சா வழியில் பூமிதான இயக்கத்தை உருவாக்கியிருக்கிறார்.

பூமிதான இயக்கம் தனி மனிதன் இயக்கமல்ல. இது காலத்தின் தேவை.

மேலும் ஸ்ரீமதி விமலா தக்கர் அவர்கள் பேசியதாவது:- "பூமிதான இயக்கம் வினோபாஜியின் இயக்கம் என்று யாரும் நினைக்கவேண்டாம். இது காலத்தின் தேவை. இக்காலத்தில் நடக்க வேண்டிய நடந்துதீரவேண்டிய இயக்கமாகும். என்னையோ அல்லது வினோபாஜியையோ நிலம் கொடுக்காமல் வெறும் கையோடு அனுப்பிவிடலாம். நிலம் கிடைக்காவிட்டால் வருத்தமோ கோபமோ எங்களுக்கு ஏற்படப்போவதில்லை. ஆனல் ஜனநாயகத்தை யாரும் திருப்பி மாற்றிவிட முடியாது. வரப்போகிற புதிய சமூக மாறுதலையும் யாராலும் தடுத்து நிறுத்திவிட முடியாது. ஜன சமூகத்திற்கு நாம் அவசியம் செய்யவேண்டிய கடமையென்று உணர்ந்து நிலதானமளிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்." இந்த இயக்கத்திற்கு ஆதரவு கொடுத்து நிலமுள்ளவர்கள் நிலமும், பணமுடையவர்கள் சம்பத்துத் தானமும் கொடுத்து உதவுமாறு கேட்டுக்கொண்டார்.

தாலுகா பூமிதானக் கன்வீனர் ஸ்ரீ செல்வராஜன் அவர்கள் தானம் கொடுத்தவர்களின் பெயர்களை வாசித்தார். மொத்தம் 40 பேர்கள் 262 ஏக்கர் 51 செண்ட் நிலதானம் கொடுத்ததாக அறிவிக்கப்பட்டது. மற்றும் பலர் சாதனமாக கலப்பை மண்வெட்டி முதலானவைகளையும் கொடுத்தார்கள்.

திருச்செந்தூர் தாலுகாவில் நிலதானமும் சம்பத்துதானமும்

ஸ்ரீமதி விமலா தக்கர் அவர்களின் திருச்செந்தூர் தாலூகா பூமிதான யாத்திரை நவம்பர் மாதம் 3-ம் தேதி ஆழ்வார்திருநகரில் முடிவு பெற்றது. ஸ்ரீமதி விமலா தக்கர் அவர்கள் 60 மைல்கள் கால் நடையாக நடந்து 20 கிராமங்களுக்குச் சென்றார். ஒவ்வொரு கிராமத்திலும் ஆயிரக்கணக்கில் பொது மக்கள் பூமிதான இயக்கச்செய்தியைக் கேட்டனர். கிராமங்களில் பூமிதான இயக்கத்தைப் பற்றிய கருத்துக்களைப் பேச ஆரம்பித்துவிட்டார்கள். "காசு பணமே கொடுக்கமாட்டாங்களே, நிலத்தை எப்படிக் கொடுப்பாங்க", "ஒரு படி தானியம்

கூட்டிக்கேட்டால் கொடுக்காத கல்மனசுக்காரங்க நிலத்தையுமா கொடுப்பார்கள்?" "லக்ஷம் லக்ஷமா ஏக்கா நிலத்தை வாங்கணும்னு கடவுளாலேதான் முடியும். மகான் வினோபா கடவுள் சக்தி படைத்தவர்", வெறுங்காட்டையும், உதவாக்கரை நிலத்தையும்தான் கொடுப்பார்கள்". என்றும் ஒரு சிலர் பேசிக்கொள்கிறார்கள். நேற்று தென் திருப்பேரையில் ஒரு கிராமவாசி மற்றொரு கிராமவாசியிடம் "கம்யூனிஸ்டுகள் ஒரேயடியாகப் பிடிங்கிக் கொள்வார்கள், அதே சமயத்தில் ஆளையும் காலி பண்ணிப் போடுவார்கள்; பூமிதானக்காரர்கள் கொஞ்சம் கொஞ்சமா வாங்கிவிடுவார்கள், ஆட்கள் யாருக்கும் நஷ்டமில்லை. அதுதான் காந்தி சொல்லுகிற வழி." இன்று காலை நடந்து வரும்பொழுது பூமிதான கோஷ்டியாரைப் பார்த்தவுடன் ஒரு அம்மாள் மற்றொரு பெண்ணிடம் "பூமிதானம் வாங்குறாங்க, எட்டு வைச்சிருக்கிறவங்க இரண்டு கொடுத்தால் என்ன? நல்லாக் கொடுக்கலாம்", என்ற இந்தவிதமான பேச்சுக்கள் பூமிதான இயக்கத்தைப் பற்றி எங்கு பார்த்தாலும் நடக்கின்றன.

தென்திருப்பேரையில் ஸ்ரீமதி விமலா தக்கர் அவர்களுக்கும் பூமிதான கோஷ்டியாருக்கும் உற்சாகமான வரவேற்பு கொடுக்கப்பட்டது. பூதான செய்தியைக் கேட்பதற்கு கொடிய வெய்யிலிலும் ஸ்ரீ ரெங்கய்யங்கார், ஸ்ரீ பி. ராஜரத்ன நாடார், ஸ்ரீ பி. கிருஷ்ண நாடார் ஆகியோர்கள் சேர்ந்து 6 ஏக்கர் 3½ சென்ட் நஞ்சை நிலத்தை தாராளமாகக் கொடுத்தார்கள். மற்றும் சம்பத்து தானமாக தினமணி நிருபர் ஸ்ரீ என். திருமலை அவர்கள் மாதம் ரூ. 10 விதமும், ஸ்ரீ அம்பலவான பிள்ளை அவர்கள் வருஷத்திற்கு ரூ. 30 விதமும் அளிப்பதாக பத்திரத்தில் கையெழுத்திட்டுக் கொடுத்தார்கள். பின்னர் பூதான கோஷ்டியார் மாலை 5-30 மணிக்கு ஆழ்வார்திருநகரி வந்துசேர்ந்தார்கள். ஆழ்வார்திருநகரி உயர்தரக் பள்ளியில் மாணவர் கூட்டம் நடைபெற்றது. அன்று நடைபெற்ற மாலைப் பொதுக்கூட்டத்தில் ஸ்ரீமதி விமலா தேவி அவர்கள் பேசியதாவது:—

"ஒருசிலர் வினோபாஜி அவர்கள் பிரம்மச்சாரி, சந்நியாசி, குடும்பமில்லாதவர் அவர் எதை வேண்டுமானாலும் கொடுத்துவிடலாம். ஆனால் நாம் கிரகஸ்தர்கள், குழந்தை குட்டியுடையவர்கள் நாங்கள் எப்படி நிலதானமளிக்க முடியுமென்று கூறுகின்றார்கள். ஆனால் வினோபாஜி அவர்கள் "நான் உங்கள் வீட்டிற்கு பிரம்மச்சாரியாகவோ சன்னியாசியாகவோ வரவில்லை. உங்களுக்கோ ஐந்தாறுபேர் கொண்ட சிறிய குடும்பம். எனக்கோ 5 லக்ஷம் கிராமங்களிலும் நிலமில்லாமல் விவசாயத்தில் பாடுபட்டு உழைத்துவரும் 5 கோடி பாட்டாளிமக்கள் என்னுடைய குடும்பத்தினர். அவர்கள் அத்தனை பேருக்கும் நிலம் கிடைக்க வேண்டுமென்று சங்கல்பம் செய்து கொண்டிருக்கிறேன்". என்று நிலதானம் கொடுக்கும்படி கேட்கிறார்.

"கடவுள் வழிபாடும், வாழ்க்கை வழிபாடும்"

ஆலயத்தில் சென்று பகவானை வழிபடும்பொழுது பூமாதேவியே மகாவிஷ்ணுவின் பத்தினியென்றும் அவர் எல்லோருக்கும் அன்னையாயிருக்கிறாரென்றும் வழிபடுகின்றோம். ஸ்தோத்திரிக்கின்றோம். வீட்டிற்கு வந்தவுடன் நிலம் தன்னுடைமையென்றும், அதைப் பிறருக்குரிமையில்லையென்றும் சொல்லுகிறோம். பிரார்த்தனை செய்வதற்கும் நாம் வழிபடுவதற்கும் உள்ள இந்த முரண்பாடு ஒழிய வேண்டும். நாம் செய்கின்ற பிரார்த்தனையும், வாழ்கின்ற வாழ்க்கை முறையும் ஒன்றாக இருக்கவேண்டுமென்றுதான், வினோபாஜி அவர்கள் பூமிதான இயக்கத்தின் மூலம் கூறி வருகிறார். யாரோ சந்நியாசி வினோபா சொல்கிறார் நாம் ஏன் கொடுக்கவேண்டுமென்று என்னை வெறுங்கையோடு அனுப்பிவிட்டால் நான் உங்களை கைகூப்பி வணங்கி போய்விடக்கூடும். ஆனால் நீங்கள் ஜனநாயகத்தையும் அவ்விதமே திருப்பி அனுப்பிவிட முடியாது எல்லோருக்கும் சமத்வமாக வாக்குரிமை அளிக்கப்பட்டிருக்கும் ஜனநாயகத்தில் ஏழ்மையும் சொத்துரிமையும் நீடித்து இருக்குமானால் ஜனநாயகத்திற்கு முடிவு கட்டிவிட வேண்டும். காலத்தின்போக்கு அதுவல்ல. ஜனநாயகத்தை மறுத்து அதைத்தடுக்க நினைப்பது பைத்தியக்காரத்தனமாகும்.

சட்டம் வரட்டுமென்று யாரும் எதிர்பார்த்திருக்கவேண்டாம். தீண்டாமை ஒழிப்பதற்குப் பெரிய சட்டமியற்றப்பட்டிருக்கிறது. சில மாதங்களுக்கு முன்புதான் தேவகட் என்னும் ஊரில் ஸ்ரீ வைத்யநாத கோவிலில் வினோபாஜி அவர்கள் ஹரிஜனங்களுடன் சென்ற பொழுது பண்டாக்களால் தாக்கப்பட்ட கொடிய சம்பவம் நடைபெற்றது. பால்ய விவாகத்தைத் தடுத்து சாரதா ஆக்ட் இயற்றி எத்தனையோ வருடங்கள் ஆகிவிட்டன. ஆயினும் இன்னும் ஒன்றிரண்டு வயதான குழந்தைகளுக்கு விவாகம் நடத்தப்படுவது நூற்றுக் கணக்கில் பார்க்கலாம். பெண்களுக்கு அரசியல் அமைப்பில் சமத்துவம் வழங்க சட்டமியற்றப்பட்டிருக்கிறது. ஆனால் பெண்கள் வீட்டில் அடைபட்டிருப்பதை எங்கும் பார்க்கிறோம். அதிகபட்ச நில வரம்பு நிர்ணயித்து சட்டம் வரப்போவதை எதிர்பார்த்து அதிலிருந்து தங்களைத் தப்பித்துக்கொள்வதற்காக சட்டசபைகளில் அங்கம் வகிப்பவர்களே தங்கள் தங்கள் குடும்பங்களுக்குள்ள நிலங்களைப் பகிர்ந்து வைத்து சட்டத்தினின்றும் தப்பித்துக்கொள்வதற்கு எல்லா வகைகளிலும் முயன்று வருகின்றனர். ஆகையால் வினோபாஜி மக்களை விழிப்படையச் செய்யக் கிளம்பியிருக்கிறார். தீவிரமான மாறுதலுக்கு கருத்துப் புரட்சி செய்துவருகிறார். இதை வரவேற்பதால் எல்லோருக்கும் வாழ்வுண்டு. நம் அரசியல் சுதந்திரம் சத்தியாக்கிரக வழியில் உலகத்திற்கு ஒரு புதுமை; அற்புதமானது. இப்பொழுது பொருளாதார சமத்துவத்திற்கு மற்றொரு அற்புதம்தான் பூமிதான இயக்கம். இந்திய மண்ணில் பாரத பூமியில் எத்தனை எத்தனையோ அதிசயங்கள் அற்புதங்கள் நிகழ்கின்றன. அரசியல் சுதந்திரத்திற்கு உலகத்திற்கு வழிகாட்டிய நாம் பொருளாதார சமத்துவத்திற்கும் வழிகாட்டுவோமென்ற உன்னதமான உயர்ந்த லட்சியத்திற்காக எல்லோரும் பங்குகொள்ளுமாறு உருக்கமாகக் கேட்டுக்கொண்டார்."

ஆழ்வார்திருநகரில் கீழ்க்கண்டவாறு நிலதானம் அறிவிக்கப்பட்டது:—

	நஞ்சை ஏ.	நஞ்சை செ.	புஞ்சை ஏ.	புஞ்சை செ.
நடுவக்குறிச்சி				
ஸ்ரீ ஜார்ஜ் ராஜா நாடார்			29	53
,, சுப்பைய நாடார்			3	25
,, அய்யாத்துரை நாடார்			19	91
,, முத்துக்குமார நாடார்			19	91
தென்திருப்பேரை				
ஸ்ரீ செ. கு. ரெங்கய்யங்கார்	3	76		
,, பொ. ராஜரத்ன நாடார் }	2	27½		
,, பொ. கிருஷ்ண நாடார் }				

3 - JAN 1956

ஆழ்வார்திருநகரி

ஸ்ரீ பெரியன் வெங்கட்டாச்சாரியார்	10	00
,, பிச்சையப்ப பிள்ளை	2	00
,, ஞானதேசிகன் செட்டியார்	7	19
,, அ. சங்கர சதாசிவம் பிள்ளை	1	59
,, யு. பி. ஆத்தானய்யங்கார்	10	00
,, ரகுபதி வெங்கட்டாச்சாரியார்	25	00
மொத்தம் ... 6 3½	128	38

— ச. ஜெகந்நாதன்

★ ★ ★

"கிராம வாசகசாலைகளுக்கு காந்தி நிதியிலிருந்து உதவி"

காந்திய இலக்கியம் கிராம வாசகசாலைகளுக்கு அளிக்க வேண்டுமென்று காந்தி நிதியில் ஒரு திட்டம் போடப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தின் கீழ் 100 வாசகசாலைகளுக்கு 50 சதவிகித மான்யத்தில் ஒவ்வொரு வாசகசாலைக்கும் ரூ. 100/-க்கு மேற்படாமல் வாங்கிக் கொடுக்கப்படும்.

வாங்கிக்கொடுக்கும் புஸ்தகங்கள் தமிழில் இருக்கும். மகாத்மாஜியால் எழுதப்பட்டவைகளும் அல்லது அவரைப்பற்றிப் பிறரால் எழுதப்பட்டவைகளும் அவர் கொள்கை அறிந்து கொள்ள உதவக்கூடியவைகளும் அவற்றில் அடங்கியிருக்கும்.

இந்த அனுகூலத்தைப்பெற விரும்புகிறவர்கள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு முன்பணம் அனுப்ப வேண்டும்.

நிர்வாகி, தமிழ்நாடு காந்தி நினைவு நிதி,
"ரவி" சொக்கிகுளம், தல்லாகுளம், மதுரை.

அவர்கள் அனுப்புகிற தொகைக்கு சரியாக இரண்டு மடங்கு விலை பெறுமான புத்தகங்கள் வாங்கி அனுப்பப்படும்.

புத்தகங்கள் அனுப்புகிற ரயில்வே பார்சல் அல்லது பஸ் சார்ஜ் விண்ணப்பதார்களே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

கிராம வாசகசாலைகள் பொது சங்கத்தால் நடத்தப்படவேண்டும். தனியாக நடத்தினாலும் வித்தியாசமின்றி பொதுமக்களுக்குப் பயன்பட வேண்டும்.

நா. ம. ரா. சுப்பராமன்
நிர்வாகி.

மனிதன் விரும்பும் அமைதி

தனிமனிதனும் சமூகமும்

தனிமனிதன் மூலம் சமூகம் ஏற்பட்டது. தனி மனிதனின் அமைதியே சமூகத்தின் அமைதி. எப்படி தனிமனிதனிலிருந்து சமூகம் ஏற்பட்டதோ அப்படியே இந்த அமைதியும் அமைதியின்மையும் தனிமனிதனின் நிலையிலிருந்து சமூகம் அடைகிறது. இந்த அமைதியின்மையை எப்படி நீக்குவது என்பதுதான் பெரும் பிரச்னையாயிருக்கிறது. இதைப் பல அறிவாளிகளும் ஆராய்ச்சியாளர்களும் யோசிக்கிறார்கள்.

இருமுனை முயற்சி

இந்த அமைதிக்கு பாடுபடுகிறவர்கள் இருமுனைகளிலிருந்தும் அமைதி ஏற்படுத்தலாம் என்ற நோக்குடன் செயல்களில் ஈடுபட்டு காரியத்தில் செய்து இதுவரைக்கும் அமைதியை ஏற்படுத்திக் கொண்டதாக தெரியவில்லை. இந்த அமைதியின்மையானது இல்லாமலிருக்கும் என்பதை நிச்சயித்திற்கு கொண்டு வரமுடியாத நிலையில்தான் தனிமனிதனோ சமூகமோ இருந்து வருகிறது. அதனால் அமைதியின்மையை அதிகப்படாமல் குறைப்பதற்குண்டான மார்க்கங்களை யோசித்துச் செய்ய வேண்டியதவசியம்.

தனி மனிதன் அமைதிபெற்றால் சமூகம் அமைதி பெறும்

இது குறைய வேண்டுமானால் தனிமனிதன் அமைதியுடன் இருக்கும் மார்க்கங்களை தனி மனிதனுக்கு போதித்து அமைதியின்மையை குறைத்து அமைதியை ஏற்படுத்தினேமேயானால் அந்த அளவுக்கு சமூக அமைதி ஏற்பட முடியும். தனி மனிதன் தன்னிடமுள்ள அமைதியின்மையை போக்குவதற்கு ஆராய்ந்து அறியும் தன்மையுள்ளவனாக தனி மனிதனை தயாரிக்கவேண்டும்!

அன்பு வேண்டும்.

அப்படி தயார் செய்வதற்கு அன்பினால் சமூகத்தை கட்டுப்படுத்தி தனி மனிதனை தயார் செய்ய வேண்டும் (இதற்கு பொதுநோக்குடன்) நடைமுறையில் அணுகி முன்மாதிரியாக இருந்து சமூகத்திற்கு வழி காட்டும் தனி மனிதர்கள் உடனடியாக வேண்டும். அவர்கள் மூலம் தனி மனிதர்களுக்கு உணர்த்தி சமூகத்தில் அதிக அமைதியை நிலைநாட்டலாம்.

— ஆர். சீனிவாச நாயக்கர்,
ஏழாயிரம்பண்ணை.

நெல்லை ஜில்லாவில் தீபாவளி விற்பனை

கடந்த வருடத்தைவிட இவ்வருடம் விற்பனை ரூ. 19253/- அதிகமாகியுள்ளது. கிளைவாரி இவ்வருட விற்பனையும், கடந்த வருட விற்பனையும் தனியாக காட்டி ஒரு அறிக்கை வேறிடத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் தீபாவளி வரை 15 தினங்கள் ஒரே மழை. இவ்விதம் மழை இல்லாதிருந்திருந்தால் இன்னும் 20,000/- அதிகம் விற்குமென எதிர்பார்த்தோம்.

குறிப்பாக இதில் ஒரு விசேஷம் என்னவென்றால் கிராம சங்கங்களுக்கு கடந்த வருடம் கொடுத்ததுபோல் கடன் கொடுக்க இயலாமலிருந்தபோதிலும்கூட போதிய மட்டும் கிராம கதர் சங்கங்கள் கடந்த வருடத்தைக் காட்டிலும் ரூ. 7381—0—0 அதிகம் விற்றிருக்கிறது.

—ஜி. ராமானுஜம்

இந்த இதழில்

தமிழ்நாடு பூமிதானக் கமிட்டி ஊழியர்களுக்கு விமலா தக்கர் அவர்கள் ஆலோசனை நான்குவித வேலைத் திட்டம்.	137
பூமிதான இயக்கம் ஒவ்வொரு வீட்டிலும் விளக்கேற்றிவைக்கும்	138
திருமங்கலம் தாலுகாவில் 164 ஏக்கர் நிலதானம் மழையிலும் யாத்திரை நிற்காமல் நடந்தது.	138
திருச்செந்தூர் யாத்திரை.	139
மூன்றாம் ஆண்டு	140
தமிழ்நாட்டில் தீபாவளி கதர் விற்பனை	141
கிராம வாசகசாலைகளுக்கு காந்தி நிதியில் உதவி	144
மனிதன் விரும்பும் அமைதி	144

Edited and Published by B. Govindaswami for All India Spinners' Association, (Tamilnad Branch) Tirupur. Printed by S. Subramaniam at the Kamala Printing Press, Tirupur.